# நிதிய முகாமையாளரின் அறிக்கை உரித்துவ நிதியம்

**அன்பார்ந்த முதலீட்டாளருக்கு,**

30 செப்டம்பர் 2024 இல் நிறைவடைந்த காலத்திற்கான CT CLSA ஈக்கியூட்டி நிதியத்தின் அரையாண்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

**பொருளாதார மீளாய்வும் கண்ணோட்டமும்**

இலங்கையின் பொருளாதாரமானது வருடத்திலிருந்து வருடமாக 2024 இன் 2ஆம் காலாண்டில் +4.71%[1] ஆல் விரிவடைந்தவேளை, இது கடந்த வருடத்தில் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது வருடத்திலிருந்து வருடம் -3.0%[1] வீழ்ச்சியினைக் கண்டிருந்தது. இதன் விளைவாக 2024 இன் முதலாம் அரையாண்டில் பொருளாதாரமானது வருடத்திலிருந்து வருடமாக +5.0%[1] ஆல் விரிவடைந்தது. 2024 இன் 2ஆம் காலாண்டின்போது பொருளாதாரத்தின் மூன்று துறைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் சேவைகள் துறையானது முறையே வருடத்திலிருந்து வருடம் +1.7%[1], +10.9%[1] மற்றும் +2.5%[1] சாத்தியமான வளர்ச்சியினை பதிவுசெய்தன. ஜூன் 2024 இல் பிரசுரிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பணியாளர்கள் அறிக்கையின் பிரகாரம், இலங்கையின் பொருளாதாரமானது 2024 இல் வருடத்திலிருந்து வருடம் +2.0%[2] ஆல் விரிவடையும் எனவும் 2025 இன் இறுதியில் விரைவான வேகத்தில் +2.7%[2] ஆல் வளர்ச்சியடையும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் பின்னர் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட பொருளாதார மற்றும் கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் அதன் இறைவரி நிலைமையினை பலப்படுத்துவதற்கும் விலை மட்டங்களை உறுதிப்படுத்துவதற்கும் துணைபுரிந்துள்ளதுடன், இதன் காரணமாக இலங்கை மத்திய வங்கி (இ.ம.வ.) அதன் தளர்வான கொள்கை நிலைப்பாட்டினை பராமரிப்பதற்கு அனுமதித்துள்ளது. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரமானது அதன் மீட்சியினை 2024 இன் இரண்டாம் அரையாண்டின் இறுதியிலும் தொடரும் என நாம் எதிர்பார்க்கின்றோம். வெளிவாரி துறையினைப் பொறுத்தளவில், சுற்றுலாத்துறை வருமானம் மற்றும் தொழிலாளர் பணமனுப்பல்கள் ஆகியவற்றிலான குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் வருடத்திலிருந்து வருடம் விரிவடையும் வர்த்தகப் பற்றாக்குறையின் தாக்கத்தினை தணித்துள்ளதுடன் 2024 இன் முதல் ஒன்பது மாதங்களில் வெளிவாரி நடைமுறைக் கணக்கில் ஒரு சென்மதி நிலுவை மிகையினை விளைவித்துள்ளது. நாட்டிற்கான டொலர் உட்பாய்ச்சல்களிலான மேற்குறிப்பிட்ட முன்னேற்றத்துடன், வெளிவாரி கடன் மீள்செலுத்துகைகளின் இடைநிறுத்தலும் சேர்ந்து சந்தை தலையீடுகளினூடாக இலங்கை மத்திய வங்கி (இ.ம.வ.) அதன் அந்நிய செலாவணி ஒதுக்கங்களை பலப்படுத்துவதனை இயலுமையாக்கியுள்ளது. உறுதியான மற்றும் முன்னேற்றமடையும் பாரிய பொருளாதார குறிகாட்டிகள், தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியின் அரசியல் கட்சியானது சமீபத்தில் நிறைவடைந்த பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையினை பெற்றுக்கொண்டது மற்றும் நடந்துகொண்டிருக்கின்ற ச.நா.நி. இன் நீடிக்கப்பட்ட நிதி வசதித் (IMF EFF) திட்டத்தில் நிலைத்திருப்பதற்கான அரசாங்கத்தின் விருப்பம் என்பவற்றை நாம் சாத்தியமாகப் பார்க்கின்றோம்.

இலங்கை ரூபாவின் பலம், சாதகமான உலகளாவிய பண்டங்களின் விலைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு படிப்படியான மீட்டலுக்கு இடையில் பணவீக்க அழுத்தங்கள் தொடர்ந்தும் தணிவுற்றதனால் 2024 இன் போது இ.ம.வ. அதன் நாணயக் கொள்கை தளர்த்தலை தொடர்ந்தது. இதன் விளைவாக, இ.ம.வ. 2024 இன் முதல் ஒன்பது மாதங்களில் அதன் கொள்கை வட்டி வீதங்களை 75 அடிப்படை புள்ளிகளினால் குறைத்ததுடன் நிலையியல் வைப்பு வசதி வீதமும் நிலையியல் கடன் வழங்கல் வசதி வீதமும் முறையே 8.25% மற்றும் 9.25% ஆக காணப்பட்டன. நெருங்கிய கால பணச்சுருக்கமானது எதிர்பார்த்ததிலும் பார்க்க ஆழமாக இருத்தல், வெளிவாரித் துறையிலான முன்னேற்றம், எதிர்கால பணவீக்க எதிர்பார்ப்புகளின் மிதமான தன்மை மற்றும் சந்தை கடன் வழங்கல் வட்டி வீதங்கள் கீழ்நோக்கி செம்மையாக்கப்படுவதற்கான இடமின்மை என்பவற்றுக்கு இடையில் கொள்கை வட்டி வீதங்களை தளர்த்துதல் அவசியம் என்னும் கருத்தினை இ.ம.வ. இன் நாணயச் சபை கொண்டிருந்தது.

[1] சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், தேசிய கணக்குகள் 2024 இன் 2ஆம் காலாண்டு

[2] https://www.imf.org/en/Publications/CR/Issues/2024/06/13/Sri-Lanka-2024-Article-IV-Consultation-and-Second-Review-Under-the-Extended-Fund-Facility-550261

3 மாதங்கள், 6 மாதங்கள் மற்றும் 12 மாதங்கள் திறைசேரி உண்டியல்களின் விளைவுகள் 2024 செப்டம்பர் இறுதியில் முறையே 10.49%[3], 10.72%[3] மற்றும் 10.05%[3] ஆக காணப்பட்டன. அரசாங்கப் பிணையங்களுக்கான விளைவுகளிலான வீழ்ச்சிக்கேற்ப சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கி செம்மையாக்கப்பட்டதுடன், நாணய நிலைமைகள் மற்றும் சந்தை திரவத்தன்மை என்பவற்றிலான முன்னேற்றத்திற்கு மத்தியில் AWPLR செப்டம்பர் மாதத்தின் இறுதியில் 9.32%[4] ஆக காணப்பட்டது.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டியினால் (CCPI) அளவிடப்படும் புள்ளியிலிருந்து புள்ளியிலிருந்தான பணவீக்கமானது செப்டம்பர் 2024 இல் -0.5%[5] பணச்சுருக்க எல்லையினுள் நிறைவடைந்தது. உணவு (வருடத்திலிருந்து வருடம் -0.3%) மற்றும் உணவல்லா (வருடத்திலிருந்து வருடம் -0.5%) பிரிவுகள் நிர்வாக ரீதியாக தீர்மானிக்கப்பட்ட விலைகளுக்கான கீழ்நோக்கிய செம்மையாக்கல்கள் மற்றும் வழங்கல் நிலைமைகளிலான முன்னேற்றங்களுக்கு மத்தியில் செப்டம்பர் மாதத்தில் பணச்சுருக்கத்தினை பதிவுசெய்தன. அதேவேளை, தேசிய நுகர்வொர் விலைச் சுட்டியினால் (NCPI) அளவிடப்படும் பணவீக்கமானது செப்டம்பர் 2024 இல் ஒரு புள்ளியிலிருந்து புள்ளி அடிப்படையில் -0.2%[7] ஆக நிறைவடைந்தது. இ.ம.வ. ஆனது நடைமுறையிலுள்ள பணச்சுருக்க நிலைமைகள் அடுத்த சில மாதங்களுக்கு நிலைத்திருக்கும் எனவும் அதன் பின்னர் படிப்படியாக அதன் இலக்குவைத்த மட்டமான 5% உடன் இணையும் எனவும் எதிர்பார்க்கின்றது.

அதேவேளை செப்டம்பர் 2024 இன் இறுதியில் சீனாவின் பீப்பள்ஸ் வங்கியுடனான பரிமாற்ற வணிகம் உள்ளடங்கலான, இது அமெரிக்க டொலர்கள் 1.4 பில்லியன் ஆகும் என்பதுடன் பயன்படுத்தல் நிபந்தனைக்கு உட்பட்டது, மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கமானது அமெரிக்க டொலர்கள் 6.0 பில்லியனாக[8] காணப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உடனடியான நெருங்கிய காலத்தில் சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணமனுப்பல்களிலான திடமான பருவகால டொலர் உட்பாய்ச்சல்களினால் துணையளிக்கப்பட்டு இலங்கை ரூபாயானது திடமாகக் காணப்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம். எவ்வாறாயினும், தொடர்ச்சியான நாணயக்கொள்கை தளர்த்தல், இறக்குமதி கட்டுப்பாடுகளிலான தளர்த்தல் (குறிப்பாக வாகன இறக்குமதி தளர்த்தல்) மற்றும் வெளிவாரி கடன் மற்றும் வட்டி மீள்செலுத்தலின் மீள் ஆரம்பம் என்பன 2025 இன் இறுதியில் ரூபாயில் அழுத்தத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நாளிதுவரைக்குமான அடிப்படையில் இலங்கை ரூபாயானது +8.2% ஆல் பெறுமதி உயர்வடைந்து செப்டம்பர் 2024 இன் இறுதியில் டொலருக்கு எதிராக ரூபா 299.4 ஆக காணப்பட்டது.

**சந்தை மீளாய்வு**

2024 இன் ஆரம்பத்திலிருந்து நாளிதுவரைக்குமான அனைத்து பங்கு விலைச் சுட்டியானது (ASPI) +11.3% ஆல் அதிகரித்தவேளை S&P SL20 சுட்டியானது +12.5% ஆல் அதிகரித்தது. மேம்பட்ட பொருளாதார நிலைமைகள் காணப்பட்டபோதிலும், நாடானது ஒரு தேர்தல் சுற்றுக்கு நுழைவதன் காரணமாக ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் முதலீட்டாளர் உணர்வானது நிலையற்று காணப்பட்டது. எவ்வாறாயினும், சந்தை வட்டி வீதங்களிலான வீழ்ச்சி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளிலான மீட்சி என்பன பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் இலாபகரத்தன்மையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை உருவாக்கின.

சர்வதேச இறையாண்மை முறிகளின் மீள்கட்டமைப்பினை சூழந்துள்ள அபிவிருத்திகளிலான முன்னேற்றங்களை கண்காணித்து முதலீட்டாளர்கள் வங்கிகளில் முதலீட்டினை மேற்கொண்டார்கள். அதேவேளை, சந்தை வட்டி வீதங்களிலான ஒரு வீழ்ச்சி மற்றம் உயர் அதிர்வெண்ணுடைய பாரிய பொருளாதார தரவுப் புள்ளிகளிலான ஒரு முன்னேற்றம் என்பன வங்கியல்லாத நிதி, மூலதனப் பொருட்கள் மற்றும் நுகர்வு தொடர்பான துறைகளில் உள்ள கம்பனிகளுக்கான முதலீடுகளை கவர்ந்தன.

[3] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/press/pr/press_20240927_treasury_bill_issuance_held_on_25_september_2024_e.pdf

[4] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/statistics/wei/WEI_20240927_e.pdf

[5] சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், CCPI இன் அசைவுகள், பக்கம் 01

[6] சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், உணவு மற்றம் உணவல்லாத பணவீக்கம், பக்கம் 01

[7] சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம, NCPI இன் அசைவுகள், பக்கம் 01

[8] இலங்கை மத்திய வங்கி, வாராந்த பொருளாதார குறிகாட்டிகள் - 18 ஒக்டோபர், பக்கம் 15

**நிதியத்தின் செயற்திறன்**

செப்டம்பர் 2024 வரைக்குமான ஆறு மாதங்களில், CT CLSA உரித்துவ நிதியமானது +3.3% ஆல் வளர்ச்சியடைந்துள்ளதுடன் இது முறையே +3.6% மற்றும் +4.1% ஆல் வளர்ச்சியடைந்துள்ள ASPI மற்றும் S&P SL20 உடன் ஒப்பிடும்போது ஒரு குறைசெயற்திறனாகும். நிதியமானது நிலைபேறுடைய இலாபங்கள் மற்றும் தடையற்ற காசுப்பாய்ச்சல் உருவாக்கக்கூடிய, அடிப்படை ரீதியில் வலுவான, குறைமதிப்பிடப்பட்ட, திரவத்தன்மையுடைய கம்பனிகளின் பங்குகளில் முன்னிறுத்தம் செய்தது. 30 செப்டம்பர் 2024 இல் உரித்துவத்திற்கான நிதியத்தின் வெளிப்பாடானது ரூபா 249 மில்லியனாகக் காணப்பட்டது. இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சர்வதேச இறையாண்மை முறிகளின் மீள்கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களின் காரணமாகவும் மேம்பட்ட பாரியபொருளாதார/கடன் சூழலின் காரணமாகவும் மீளாய்வு செய்யப்படும் காலத்தின்போது நிதியமானது வங்கியியல் துறையிலுள்ள கம்பனிகளுக்கான வெளிப்பாட்டினை அதிகரித்தது. மேலும், கடந்த ஆறு மாதங்களில் நிதியமானது "மூலதனப் பொருட்கள்" மற்றும் "நுகர்வோர் நிலைப்பொருட்கள் மற்றும் ஆடை" துறைகளுக்கான அதன் வெளிப்பாட்டினை அதிகரித்தது. நிதியமானது, நியாயமாக விலையிடப்பட்ட மற்றும் நிலைபேறுடைய திடமான இலாபம் / தடையற்ற காசுப் பாய்ச்சல் வளர்ச்சியினை அளிக்கக்கூடிய கம்பனிகளில் தொடர்ச்சியாக முதலீடு செய்கின்றது.

**CT CLSA உரித்துவ நிதியத்தின் செயற்திறன் எதிர் ASPI & S&PSL20; மார்ச் 2024 – செப்டம்பர் 2024**

| | 1 மாதம் (%) | 3 மாதம் (%) | 6 மாதம் (%) |
|---|---|---|---|
| **CEF** | 7.2 | -2.5 | 3.3 |
| **ASPI** | 9.1 | -2.4 | 3.6 |
| **S&P SL20** | 12.9 | -3.8 | 4.1 |

**கண்ணோட்டம்**

சர்வதேச நாணய நிதியத்தினால் ஆரம்பத்தில் எதிர்பார்த்ததிலும் பார்க்க இலங்கையின் பொருளாதாரமானது விரைவான வேகத்தில் தொடர்ந்தும் மீட்சியடைந்தது. இதற்கு துணையாக, இ.ம.வ. இனால் பொறுப்பேற்கப்பட்ட திடமான நாணயக்கொள்கை நடவடிக்கைகள், முன்னைய நிர்வாகத்தினால் அமுலாக்கப்பட்ட முக்கிய கட்டமைப்பு சீர்திருத்தங்கள் நடைமுறை நிர்வாகத்தினால் தொடரப்படுகின்றமை மற்றும் நாட்டின் வெளிவாரி துறையில் ஒரு நிலைபேறான முன்னேற்றம் என்பன காணப்பட்டன. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகிய இரு தேர்தல்களும் நிறைவுற்று எதிர்வரும் வாரங்களில் ஒரு முறையான அதிகார மாற்றம் எதிர்பார்ப்பதுடன், அரசியல் சுழற்சியினால் ஏற்பட்ட உறுதியின்மை தற்போது பெரும்பாலும் நிறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும், பதவியேற்றுள்ள அரசியல் தலைமையினால் மேற்கொள்ளப்படும் இறைவரிக் கொள்கையானது 2025 இன் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டுள்ள 2025 இற்கான பாதீட்டு அறிவித்தலுடன் இன்னமும் மதிப்பிடப்படவுள்ளது. அதேசமயம், நாட்டின் தவறுதலடைந்த வெளிவாரி கடன் மீள்கட்டமைப்பு தொடர்பாக கொள்கையளவில் உத்தியோகபூர்வ மற்றும் தனியார் கடன் வழங்குனர்களுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கையுடன் கணிசமானளவு முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. சர்வதேச இறையாண்மை முறிகளது பரிமாற்றமானது 2024 இன் இறுதியில் நிறைவடையும் என எதிர்பார்ப்பதுடன், இத்துடன் இலங்கையின் கடன் மீள்கட்டமைப்பு செயன்முறையானது நிறைவடைந்துள்ளது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்துடன் இணைந்த அளவுசார் இலக்குகளை இலங்கை விஞ்சியுள்ளதுடன், திட்டத்தின் மூன்றாம் மீளாய்வின் நிறைவானது ச.நா.நி. அணியுடன் எட்டப்பட்ட பணியாளர் மட்ட உடன்படிக்கையுடன் ஏற்பட்டுள்ளது. வழங்குநர் பக்க செம்மையாக்கல்களினால் துணையளிக்கப்பட்டு பணவீக்கமானது பணச்சுருக்க எல்லையினுள் நுழைந்துள்ளதுடன் சந்தை கடன் வழங்கல் வட்டி வீதங்கள் தொடர்ச்சியாக கீழ்நோக்கி செம்மையாக்கப்படுகின்றன. வரி செம்மையாக்கப்பட்ட அடிப்படையில் நிலையான வருமானப் பிணையங்களிலிருந்தான மெய் விளைவுகள் மிகக் குறைவாகக் காணப்படுவதனால் உரித்துவங்கள் மற்றும் கம்பனி கடன்கள் நோக்கிய உள்ளூர் நிதிப் பாய்ச்சல்கள் தொடரும் என நாம் எதிர்பார்க்கின்றோம். கடந்த

சில காலாண்டுகள் மீது காணப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியுடன் கம்பனிகள் திடமான இலாபகரத்தன்மையினை அறிக்கையிடுவதிலிருந்து உரித்துவங்கள் மேலும் நலனடைவதற்குள்ளன. மேலும், பிராந்திய சந்தைகளுடன் ஒப்பிடும்போது இலங்கை உரித்துவங்களின் கவர்ச்சிகரமான பெறுமதியிடல்களும் ஒப்பீட்டளவில் இலங்கை பொருளாதாரத்தின் திடமான அடித்தளம் என்பன வெளிநாட்டு நிதிச் பாய்ச்சல்களை கவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது கருத்தின் பிரகாரம், தளர்வான வட்டி வீதங்கள், பொருளாதார சூழல் /கம்பனி இலாகரத்தன்மையிலான மீட்பு, கவர்ச்சிகரமான பெறுமதியிடல்கள் மற்றும் வரி செயற்திறனாக சொத்து வகுப்பு காணப்படுகின்றமை என்பவற்றால் துணையளிக்கப்பட்டு அடுத்த 12 மாதங்களில் உரித்துவங்கள் சிறப்பாகச் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதார நெருக்கடி ஆரம்பிப்பதற்கு முன்னர் நிறுவப்பட்ட அதியுயர் மட்டம் நோக்கி உரித்துவச் சுட்டியானது நகர்ந்தபோதிலும், உழைப்பு செம்மையாக்கப்பட்ட அடிப்படையில் உரித்துவப் பெறுமதியிடல்கள் மேல்நோக்கி மீள்தரப்படுத்துவதற்கு மேலும் வாய்ப்பு காணப்படுகின்றது என நாம் எண்ணுகின்றோம். எனவே, நாம் உரித்துவப் பிணையங்களில் மிகை நிறையிட்டுள்ளவேளை, நெருங்கிய மத்திய காலத்தில் இலாப வளர்ச்சிக்கான சாத்தியம் மற்றும் திடமான அடிப்படைகளை வெளிக்காட்டும் ஒரு தெரிவுசெய்யப்பட்ட கம்பனிகள் பட்டியலில் எமது முதலீட்டினை முன்னிறுத்தம் செய்கின்றோம்.